## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## முதலாம் வருட பொதுக் கலைமாணித் தேர்வு (வெளிவாரி) - 2004/05

## (ஒக்டோபர்/நவம்பர் – 2006)

# PHY 101 – மெய்யியற் பிரச்சினைகள்

நேரம்: 3 மணித்தியாலங்கள்

**பகுதி I இலிருந்து இரு வினாக்களையும் பகுதி II இலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவுசெய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

---

## பகுதி – I

1. அ. பின்வரும் பிரகாரங்களுக்கு வாய்ப்பாக வரக்கூடிய வாதங்களை வடிவமைத்துக் காட்டுக.

(i) தராப்தி (DARAPTI)
(ii) பெசப்போ (FESAPO)
(iii) பாபறா (BABARA)
(iv) பறோக்கோ (BAROCO)

(2 x 4 = 8 புள்ளிகள்)

ஆ. (i) எடுகூற்றுக்கள் உண்மையாகவும், முடிவுக்கூற்று உண்மையாகவும் அமைந்த வாய்ப்பான வாதம்

(II) எடுகூற்றுக்கள் உண்மையாகவும், முடிவுக்கூற்று பொய்யாகவும் அமைந்த வாய்ப்பற்ற வாதம்

மேற்படி சந்தர்ப்பங்களுக்கு பொருந்தி வரக்கூடிய மொழிநடை வாதங்களை வடிவமைத்துக் காட்டுக.

(4 x 2 = 8 புள்ளிகள்)

இ. உண்மை, வாய்ப்பு என்பவற்றிற்கிடையினாலான வேறுபாட்டினை உதாரணந் தந்து விளக்குக.

(4 புள்ளிகள்)

2. அ. பின்வரும் மொழிநடைவாக்கியங்கள் எவ்வகை இருதலைக் கோள் வடிவமென எடுத்துக் காட்டுக.

(i) ஒன்றில் அவன் கண்டிக்கு சென்றால் அவனது மனைவியை சந்திப்பான் அல்லது கொழும்பிற்கு சென்றால் அவனது மனைவியை சந்திப்பான். அவன் கண்டி அல்லது கொழும்பிற்கு சென்றுள்ளான். எனவே அவனது மனைவியை சந்திப்பான்.

(ii) ஒன்றில் மழை பெய்யுமாயின் வெள்ளம் வரும் அல்லது புயலாயின் பஞ்சம் ஏற்படும். ஆனால் வெள்ளமோ பஞ்சமோ ஏற்படவில்லை. எனவே மழையோ புயலோ ஏற்படவில்லை

(3 x 2 = 6 புள்ளிகள்)

ஆ. குறை எடுகூற்றுக்கள் இரண்டிலிருந்து ஏன் எதுவித முடிபினையும் பெறமுடியாது என்பதனை நியாயத்தொடையின் பிரதான விதிகளின் துணையுடன் விளக்குக.

(4 புள்ளிகள்)

இ. எடுப்பு முரண்பாட்டு சதுரத்தின் பல்வேறு பிரிவுகளை மொழிநடை உதாரணம் மூலம் விளக்கி சமகால விமர்சனத்தினையும் சுருக்கமாக குறிப்பிடுக.

(10 புள்ளிகள்)

3. அ. பின்வரும் வாதங்களை வடிவமைத்து வெண்விளக்கப்பட உதவியுடன் அவற்றின் வாய்ப்பினை துணிக.

(i) சிங்கங்களும், கரடிகளும் பயங்கரமானவை அல்ல. எனவே பொதுவாக கரடிகள் சிங்கங்களாகும்.

(ii) விண்ணகம் செல்வோர் அனைவரும் செல்வந்தர்கள் ஆனால் மாலாவும் விண்ணகம் சென்றுள்ளதால் அவளும் செல்வந்தமானவளே.

(4 x 2 = 8 புள்ளிகள்)

ஆ. பின்வருவன வெண் வரைபடங்களாகும், இவற்றிற்கு பொருத்தமாக அமையக்கூடிய மொழிநடை வாக்கியத்தினை வடிவமைத்துக் காட்டுக

(i)




(ii)




(2 x 2 = 4 புள்ளிகள்)

(iii) ஒயிலரின் வரைபட முறையின் குறைபாடுகளை வெண் வரைபடத்துடன் ஒப்பிட்டு விளக்குக.

(8 புள்ளிகள்)

4. பின்வருவனவற்றுள் எவையேனும் நான்கிற்கு குறிப்பெழுதுக
   (i) இடைமாறுந் தொடர்புகள்
   (ii) கருத்துக் குறிப்பும் அகலக் குறிப்பும் (பதங்கள்)
   (iii) பதங்களின் பரவல்
   (iv) பகுப்பெடுப்பும் தொகுப்பெடுப்பும்
   (v) அரிஸ்டோட்டிலின் அளவையியல் வரையறைகள்

## பகுதி – II

5. ஐரோப்பிய மெய்யியலின் வரலாற்று ரீதியான வளர்ச்சியினை மதிப்பிடுக.

6. காரணமுதல் வாதம், அனுபவமுதல் வாதம் எனும் எண்ணக்கருக்களை விரிவாக ஆராய்க.

7. சமகால மெய்யியற் சிந்தனையில் யுத்த ஒழுக்கம் தொடர்பாக நீர் பரிந்துரை செய்யும் விடயங்களை விளக்குக.

8. உண்மை பற்றிய மெய்யியற் கொள்கைகளை விளக்குக.

9. கடவுள் இருப்புப் பற்றிய யாதாயினும் இரு கொள்கைகளை விமர்சன ரீதியாக பரிசீலிக்குக.